தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1971 ஜூலை 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

செங்கோட்டை பாலராமவர்மா நூற்பாலை

* 3. குறுகிய கால வினா—திரு. கா. மு. கதிரவன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பல மாதங்களாக மூடப்பட்டுள்ள செங்கோட்டை பாலராம வர்மா நூற்பாலையில் வேலை செய்த 700 தொழிலாளர் குடும்பங்கள் அல்லல்படுவதைத் தவிர்க்க, அவ்வாலையை உடனடியாக ஏற்று நடத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, ஐ.டி.ஆர். சட்டப்படி 21 மில்கள் வரையிலும் மத்திய அரசாங்க விசாரணைக்காக அனுப்பப்பட்டன என்று ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரியான 21 மில்களில் செங்கோட்டையில் இருக்கக்கூடிய பாலராமவர்மா ஸ்பின்னிங் மில்லும் ஒன்று? அப்படியானால், எம்மாதிரியான பதில் கொடுத்திருக்கிறார்கள்? அந்தப் பதில் நமக்கு விரோதமாக இருக்குமானால், அரசு மற்ற மில்களை ஏற்று நடத்துவதைப்போல இதையும் ஏற்று நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆலையையும் அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஐ.டி.ஆர். சட்டத்தின் கீழே மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தோம். அவர்கள் இந்த ஆலையை எடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணத்தினால் என்பது சரியாக விளக்கப்படவில்லை. காரணம், இந்தக் குழுவினுடைய பரிந்துரையில், இந்த ஆலை எடுத்து நடத்தக்கூடிய ஆலை, நல்ல இயந்திரங்கள் உள்ள ஆலை என்று சொல்லியிருக்கிறார்கள். அதே சமயத்தில் அதை எடுத்துக் கொள்ளுவதற்கு அனுமதி அளிக்கவில்லை. எடுத்துக் கொள்ளுவதற்கு அனுமதி அளித்தால்தான் நாம் ஐ.டி.ஆர் சட்டத்தின் கீழ் எடுக்க முடியும். மறுபடியும் அவர்களுக்கு எழுத இருக்கிறோம். எழுது

வதற்கு முன்னால், நாமே இந்த ஆலை அதிபர்களுடனும் தொழிலாளர்களுடனும் பேசி முடிவு எடுக்கலாமா என்பதைப் பற்றியும் ஆலோசித்து வருகின்றோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஆலையானது ஏற்கெனவே மூடப்பட்டு, மீண்டும் திறந்து, மறுபடியும் மூடப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி, இந்த ஆலை நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய, நல்ல இயந்திரங்கள் உள்ள ஆலையாகும். அங்கேயிருக்கும் நிர்வாகத்தில் ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாகத்தான் இது மூடப்பட்டிருக்கிறது. 200 தொழிலாளர்களுக்கு மேல் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டிருப்பதால் அரசு இதில் துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொடக்க காலத்தில் நிர்வாகத்தில் சிக்கல் ஏற்பட்டது. அரசாங்கம் தலையிட்டு அந்தச் சிக்கலை ஓரளவு தீர்த்து வைத்தது. அதற்குப் பின்னர், நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் சிக்கல் ஏற்பட்டு, இந்த ஆலை மூடப்பட்டுள்ளது. நாம் அதை மீண்டும் பரிசீலித்து இந்தச் சட்டத்தின்படி எடுக்கும் முயற்சியில் ஈடுபடலாம்.

Murder of former Member of Parliament at Tirunelveli.

* 318 Q.—THIRU A. SWAMIDHAS: Will the **Hon. the** Chief Minister be pleased to state—

(*a*) whether any former Member of Parliament was murdered at Tirunelveli about the 15th April 1971; and

(*b*) if so, the details of the investigation made thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (ஆ) ஆம். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. முத்தையாபிள்ளை என்பவர் திருநெல்வேலியில் 15—4—71-ல் கொலை செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு சிறைக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். புலன் விசாரணை முடிவு பெற்றுள்ளது. வழக்கைத் தாக்கல் செய்யும் கேள்வி ஆய்விலுள்ளது.

தமிழ் நாட்டில் தேர்தல் தகராறு காரணமாக கொலையுண்டவர்கள்.

* 319 வினா—திரு. சு. துரைசாமி :
திரு. சி. கணேசன் : } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-ம் ஆண்டு தேர்தலை முன்னிட்டு 1—1—1971-ல் இருந்து 13—3—1971-ம் தேதி முடிய தமிழ் நாட்டில் மட்டும் தேர்தல் தகராறு காரணமாகக் கொலையுண்ட திராவிட முன்னேற்றக் கழக முற்போக்குக் கூட்டணித் தோழர்கள், ஆதரவாளர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஐந்து பேர்.